Regd. No. M. 4408.] [தனிப் பிரதி 0—1—6.

# "AGASTHIAN."

# அகஸ்தியன்.

மாதாந்தர சித்த வைத்தியத் தமிழ்ப் பத்திரிகை.

ஆசிரியர்:- G. தெக்ஷிணாமூர்த்தி பிள்ளை. உதவி ஆசிரியர்:- G. கண்ணுசாமி பிள்ளை.

நோய்நாடி நோய்முதனாடி யது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

அற்றல் அளவறிந்துண்க அஃதுடம்பு
பெற்றன் நெடிதுய்க்கு மாறு — குறள்

மலர் 2. திருத்துறைப்பூண்டி 1942-ஆு பிப்ரவரி-மீ 1உ இதழ் 1.

## பொருளடக்கம்.


| | |
|---|---|
| கொடி வணக்கம் | 'பக்தன்' |
| நாட்டு வைத்தியமும் நமது பத்திரிகையும் | G. கண்ணுசாமி பிள்ளை |
| ரஜஸ்வலை | 'நீலாம்பிகை' |
| மந்திர சக்தி | கா. ந. பா. |
| இரண்டாவது மலர் | ... ... ... |
| இலகு வைத்தியப் பகுதி | K. சுந்தரத்தம்மாள் |
| உதயசங்கரன் | நாகை என். பாலசுப்ரமண்யம் |
| பரமஹம்ஸரின் பக்திரச நாடகம் | T. M. U. பதி |
| சித்த முனிவர்கள் | S. வைத்தியலிங்கம் செட்டியார் |
| போற்றித் திருத்தலக் கோவை | குறுக்கை க. குப்புசாமி பிள்ளை |


## சித்தர் கொடி வணக்கம்.

'பக்தன்'

சித்தர் மணிக்கொடி பாரீர்—தெய்வ
சிந்தை யிருத்திப் பணிந்திட வாரீர்!

1. முத்தர்கள் வாழ்நீல வானம்—மோதி
மொய்ம்பின் வளர்ந்துயர் மாபெருங் கம்பம்
முத்தொளிர் வன்னத் துவஜம்—அதன்
மீது விளங்கித் திகழ்வது காணீர் (சித்)

2. உலகம் புரந்திடு மந்திரம்—வேத
உண்மைப் பொருள்தரும் ஓங்கார யந்திரம்
அலகில் புகழ்தாப் பெய்து—இன்பம்
அள்ளச் சிலிர்த்திடும் அற்புதங் காணீர் (சித்)

3. முத்தமிழ் கொண்டிருந்த பூமி—வேண்டும்
மேன்மைக் கலைச்செல்வ மெத்தனை யுண்டோ
அத்தனையுஞ் செய்த சித்தன்—ஆதி
அந்தமில் ஞான அகத்திய னேத்துஞ் (சித்)

4. சித்திக ளெட்டுந் து[illegible]ங்கத்—தவ
சித்த முனிவர்கள் சொன்[illegible] கண்டீர்!
செத்தாரை மீட்டும் மருந்து—தனிச்
சக்தி படைத்திந்த வையந் த[illegible]ந்துஞ் (சித்)

அகஸ்தியனில் பிரசுரமாகும் கதைகள் கட்டுரைகளில் காணப்படும் பெயர்கள் கற்பனைப் பெயர்கள்.
அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

# நாட்டு வைத்தியமும் :- -: நமது பத்திரிகையும்.

(வைத்தியபூபதி G. கண்ணுசாமி பிள்ளை, திருவாரூர்.)

**த**க்ஷணாயனம் ஆரம்பித்த பதினெட்டாம் நாள்! பேரும் புகழும் பெற்ற காவிரித்தாய் நிறை வெள்ளமாகப் பொங்கி ஓடம்போக்கி ஆற்றின் இருகரையுந் தொட்டுக்கொண்டு பிரவாகமாகப் போய்க்கொண்டிருந்தாள். பொன்னால் செய்த பேழைக்குள் நவரத்னங்கள் பெய்து கிடப்பதைப் போலப் பொன்னிமா நதியின் மீது 11 ஏட்டுச் சுவடிகள் அலைவீசிக் கொண்டு மிதந்து வந்தன. எனக்கு அப்பொழுது பதின்மூன்று பிராயமிருக்கலாம். ஆண்டவன் அளித்த ஒப்பற்ற பரிசுபோலக் கிடைத்த 11 ஏட்டுச் சுவடிகளும் எனது வாழ்க்கையை அன்றுமுதல் மாற்றிவிட்டன. சித்த வைத்தியம் வேறு நான் வேறு என்ற எண்ணம் எனக்கு இல்லாதொழிந்து போயிற்று. இந்தப் பூர்வப் பெருமை என்றும் அழியாமல் நிலைபெற்றிருக்க வேண்டுமே என்ற விசாரத்தினால் அன்றுமுதல் இன்றுவரையில் என்னால் இயன்றமட்டிலும் பாடுபட்டு வந்திருக்கிறேன். 1912-ம் வருஷம் டிசம்பர் மாதம் 12ந் தேதி பகல் 11¼ மணிக்கு ஆரம்பித்து 1935-ம் வருஷம் பிப்ரவரி மாதம் வரையில் நடைபெற்ற திருவாரூர் முனிஸிபல் சித்த வைத்திய சாலையின் ஊழியனாய் இருந்து 6,56,936 நோயாளிகளுக்கு சிகிச்சை செய்யும் பாக்கியத்தையும் பெற்றேன். நாட்டு வைத்தியம் என்று இகழும் அவமானத்தைத் தொலைத்துத் தலை நிமிருவதற்குப் பற்பல ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்து பிரசாரம் செய்யலானேன். சென்னை கவர்ன்மெண்டு இந்திய மெடிக்கல் போர்டின் அங்கத்தினனாய் ஆனபிறகு, எனது சேவைக்குக் கொஞ்சம் வசதி கிடைத்தது.

இந்திய வைத்தியர்களின் உலகம் மிகப்பெரியது. அதற்குப் பிரசாரம் மட்டிலும் போதுமானதாயில்லை. எந்த ஒரு சித்தாந்தமும் பத்திரிகையில்லாமல் வியாபகமடைவது சாத்தியமில்லை.

ஆதலின், நமக்கென்று ஒரு பத்திரிகையை ஆரம்பித்துவிட வேண்டுமென்று கருதி, பழனி, மதுரை, சென்னை முதலிய இடங்களுக்கு சென்று அதற்காக வேண்டிய முயற்சிகளைச் செய்தேன். 'தன்வந்திரி,' 'சித்தன்,' 'சித்தர் களஞ்சியம்' எனப் பல சித்த வைத்தியப் பத்திரிகைகள் வெளித் தோன்றி, நமது வைத்திய சிரோமணிகளின் ஆதரவில்லாமல் மறையும்படியாயின. இறுதியாக நமது **அகஸ்தியன்** ஆரம்பமாகி ஓராண்டு இனிது முடிந்துவிட்டது. இது சித்த வைத்தியர்களுக்கு சந்தோஷத்தையும் பெருமையையும் அளிக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆசிரியர் G. தக்ஷிணாமூர்த்தி பிள்ளை அவர்களின் கையிலிருந்து மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய்க்கு அதிகமாகவே செலவிடப்பட்டிருக்கிறது. 250 பேர்களுக்கு ஓராண்டு பூராவும் பத்திரிகை அனுப்பிவந்தும் அவர்கள் நாளது வரையில் தமது சந்தாவை செலுத்தியபாடில்லை. ஒரு வருஷத்தில் 500 ரூபாய்க்குமேல் செலவிடப்பட்டதற்கு சந்தா 50 ரூபாய் வருலானால் பத்திரிகை எவ்வாறு நடைபெறும் என்பதை சித்த வைத்தியர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும்.

நமது வைத்தியர்களின் ஜீவிய கலைக்காகப் பாடுபடும் ஒரு பத்திரிகையை ஆதரிக்கவில்லையென்றால் நமது புத்திசாலித்தனத்தை என்னென்பது? பத்திரிகை படிக்கும் வழக்கத்தைக் கைகொள்ளாமையால் நாட்டு வைத்தியருக்கு லைசென்ஸ் கொடுக்கும் காலத்தை கொஞ்சம் கொஞ்சமாய் ஆறு வருடகாலம் நீட்டி வைத்தும் 10,000 நாட்டு வைத்தியர்கள் லைசென்ஸ் பெறாமல் இருந்துவிட்டு இப்பொழுது விழிக்கிறார்கள். திருத்துறைப்பூண்டி சங்கமும ஏனைய சங்கங்களும் இதற்காக செய்த பிரசாரமெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கம் போலாயிற்று.

இந்திய வைத்தியர்களின் கிளர்ச்சியினால்தான் மெடிக்கல் போர்டு ஏற்பட்டதும், பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டு இந்திய வைத்தியம் சட்டப்பூர்வமானதும் என்பதை யாரும் மறந்துவிடலாகாது. நாட்டு வைத்தியன் வந்துவிட்டால் பயந்து நடுங்கி பையைச் சுருட்டிக்கொண்டு ஓடிய காலம் போக இப்பொழுது, ஒரு இங்கிலீஷ் வைத்தியனுக்கே சிகிச்சை செய்யக்கூடிய அந்தஸ்தை அளித்தது எது? நமது கிளர்ச்சியல்லவா?

ஆகவே, நமது கலையில் புகுந்துவிட்ட குறைகளை நிவர்த்தி செய்து இதனைச் சம்பூர்ணமான சாஸ்திர மாக்கவும், சர்க்கார் சட்டத்தினால் நமக்கு பாதகம் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளவும், எதிர்கால சந்ததியார்களுக்கு இச்சாஸ்திரம் தெளிவாக விளங்குவதற்கும், ஒரு பத்திரிகை அவசியம் என்பது வெளிப்படை. ஆதலின், 1942-ம் வருஷத்துக்காகிலும் அனைவரும் சந்தா செலுத்தி பத்திரிகையைப் பெற்றுக்கொள்வதுடன் அவரவர்க்கு தெரிந்தவர்களையும் மெம்பராகச் சேரும்படிச் சிபார்சு செய்ய வேண்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.



**ரஜஸ் ரக்ஷா.**

சூதக நிலை சரியாய் இல்லாவிடில் பெண்களின் ஆரோக்கியம் கெட்டுப் போகிறது. வீட்டின் எஜமானி குதூகலமாய் இருந்தால் வீடு முழுவதும் லக்ஷ்மீகாமாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவள் சந்தோஷமாய்இருப்பதற்கு **ரஜஸ் ரக்ஷா** அவசியம் கையிலிருக்க வேண்டும். சூதக சம்பந்தமாய் ஏற்படும் சகல ரோகங்களையும் சௌக்கியம் செய்வதில் இணையற்றது. சீக்கு நிலைமைக்கு எழுதவும்.

மானேஜர், விலை ரூ. 1-0-0.

**V. மெடிக்கல் ஹால்,**

திருத்துறைப்பூண்டி P.O.

# "அகஸ்தியன்."

மாதம் ஒருமுறை வெளிவரும் ஓர் உயரிய வெளியீடு

தாய் மொழித் தமிழை ஆய்வுற வின்பம். | சித்த வைத்தியத்தை நந்து[illegible]ன்பம்.

மலர் 2. | திருத்துறைப்பூண்டி 1942-௵ பிப்ரவரி-௴ 1௳ | இதழ் 1.

பெண்ணுலகம்.

## ரஜஸ்வலை.

### கடிதம் 3.

அன்புள்ள கமலத்துக்கு அநேக ஆசீர்வாதம். உபயக்ஷேமம் க்ஷேமத்துக்கு எழுதவும்:—

போன கடிதாசி அவசரத்தில் கிறுக்கிவைத்தேன். பிசகுகள் இருக்கலாம். எல்லாவற்றையும் சரிபண்ணிக்கொண்டு விஷயத்தை மட்டிலும் கிரகித்துக்கொண்டால் போதும். இப்பொழுது சாவகாசம் கிடைத்துவிட்டதோ என்று நீ பயப்படக்கியப்படப் போகிறாய்! நாலைந்து பிள்ளைக்குட்டிகள் ஆகிவிட்டால் அவசரந்தான் பிடுங்கித்தின்கிறதே! என்ன செய்யச் சொல்லுகிறாய்?

எஸ்கிமோ ஜாதியாரைப் பற்றிப் பள்ளிக்கூடத்தில் படித்தோமே ஞாபகம் இருக்கிறதா? அந்த ஜாதியில் பிறந்த பெண்மணிகள் கோடைகாலத்தில் மட்டும் தீண்டல் வந்து ஒதுங்கியிருப்பார்களாம். கடுங்கோடையில் கூட அவர்களுக்கு ரஜஸ் ரொம்ப அற்பமாகத்தான் வெளிப்படுமாம். பிரான்ஸு தேசத்து தென் மாகாணங்களில் வசிப்பவருக்கு 120 கிராமிலிருந்து 40 கிராம் வரையில் (அதாவது 4 வுன்ஸிலிருந்து 8 அவுன்சுவரையில்) ரம் சிந்துவது வழக்கமாம். இந்த வு 300, 350, 508 கிராம் வரை அதாவது 10, 12, 16½ அவுன் வரையில்) அதிகப்படுவதாய் ய சாஸ்திரிகள் எழுதியிருக் ள். கடகரேகை—மகரரேகைப் தியங்களில் வசிப்பவருக்கு அதி ம் என்பது சர்வசாதாரணம். வர்கள் சரீரத்துக்கு அது எவ்வித கெடுதலையும் செய்வதில்லை. உத்தரா ண மாதங்களில் கூடுதலாய் உதிரம் பாவது இயல்பு. இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் மேற்படி கூடுதல் குறைவை நோய் என்று எடுத்துக் கொள்வது தவறு. உதிரத்தின் நிறம் குணம் முதலானவை அதன் அளவுக்குத் தக்கபடி வித்தியாசமடைகின்றது. உதிரம் குறைவாகப் போனால் அதன் நிறம் வெளுப்பாகவிருக்கும். இயற்கையான அளவிற் போகுமானால் ரத்த வர்ணமாயிருக்கும். இயற்கைக்கு அதிகமாய்ப் போகுமானால், கருஞ்சிவப்பு வர்ணமாயிருக்கும்.

சூதகப் போக்கில் எவ்வித கோளாறுமில்லாமல் மாதவிடாய் காலத்தில் ரத்தம் நஷ்டப்பட்டால் பாதகமொன்றுமில்லை. ஆரோக்யமான தேகிகளுக்கு மாதவிடாய் காலத்தில் ரத்தம் நஷ்டமடைந்தால் முழுகியபின் அந்த நஷ்டம் ஈடு செய்யப்படும். இரத்த நஷ்டத்தால் ஏற்படும் பலஹீனம் ஈடு செய்யப்படுவதற்குள் மாதவிடாய் வந்து விட்டாலும் அல்லது அந்தப் பலஹீனம் ஈடாகாமல் ரத்த சோகை என்ற வியாதியை உற்பத்தி செய்தாலும் சூதகநிலை கெட்டுப்போயிருப்பதாய் நிச்சயம் செய்துகொள்ளலாம்.

சூதகப் போக்கு ஆரோக்கியமாகவும் ஒழுங்காகவும் இருப்பதாய் அறிவதற்கு மற்றொரு அறிகுறியுமுண்டு. மாதவிடாயின் ஆரம்ப காலத்தில் குறைவாகவும், மத்திய காலத்தில் அதிகமாகவும், அந்தியகாலத்தில் குறைவாகவும் உதிரம் பெருகுவது சூதகத்தின் ஒழுங்குநிலையைக் குறிக்கும். ஆரம்ப காலத்தில் அதிகமாகவும், மத்தியகாலத்தில் குறைவாகவும், அந்தியகாலத்தில் அதிகமாகவும் போவது ஒழுங்கீனம். அடிக்கடி அதிகமாய்ப் போவதும் குறைவதும் ஒழுங்கற்ற நிலை. மத்திய காலத்தில் அறவே நின்று திடீரென்று பீறிக்கொண்டு பெருகுவதும், சடக்கென்று நின்று போய் மீண்டும் பெருகுவதும், இவை போன்ற பலவித இடக்குகள் சம்பவிக்குமானால் சூதகநிலை புரண்டு கிடப்பதாய்க் கொள்ளவேண்டும்.

கருப்பாசய உட்கருவிகள் நெருங்குண்டு போவதால் ஒருவகையான நமச்சல் ஏற்படுவதுண்டு. சிலசமயம் மர்மஸ்தானத்தின் உட்புறமும் வெளிப்புறமும் தாங்கமுடியாதபடி அரிப்புண்டாகும். சில பெண்களுக்கு தூரம்வர இரண்டுநாள் இருக்கும்போதே இந்த நமச்சல் துவக்கமாகிவிடும். தூரம் வருவதற்கு இது ஒரு முன்னறிவிப்பு என்றுகூடச் சொல்லலாம். முழுகி வீட்டுக்கு வந்தபிறகும் இந்த நமச்சல் நீங்கவில்லையென்றால் இரத்தம் கெட்டுப் போயிருப்பதாய்த் தெரிந்துகொண்டு இரத்த சுத்திக்கு உடனே மருந்து சாப்பிட்டாகவேண்டும்.

மேலே சொன்னபடி தூரம் வர சில நாளைக்கு முன்போ, சில மணிகளுக்கு முன்போ, பற்பல கோளாறுகள் சம்பவிக்கின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறேன் கவனி.

பசி இருக்காது; செரிமானம் ஆகச் சங்கடப்படும். மூச்சுத்திணறும்; மலங்குழம்பும். நரம்பு நாளங்கள் பிகுவேறி நிற்கும். தாது படபடப்பாய் நடக்கும். ஹிருதயம் துடிக்கும்; த்தோற்றம் நிமிஷத்துக்கு நிமிஷம் றுபடும். மர்மஸ்தானத்தில் அ ப்புப் பிடுங்கி எடுக்கும். வீட்டுவேலைகள் செய்யவோ

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

# மந்திர சக்தி.

பிரான்ஸ் ஹார்ட்மன், M. D., அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியது.
(நா. ந. பா. மொழிபெயர்ப்பு.)

மனிதன் என்றால் யார்? கைகளா கால்களா கண்களா அல்லது சகல உறுப்புக்களுங் கொண்ட சரீரந்தானா என்று கொஞ்சம் புத்திபூர்வமாய் யோசித்துப் பார்க்கவேண்டும். ஆம் இங்கே கொஞ்சம் கவனியுங்கள்! சகல உறுப்புக்களையும் பெற்றிருக்கும் தேகத்துக்குள் அவ்வியக்தமாக நின்று இயங்குவது எதுவோ, தாவராதி விலங்கு வர்க்கங்களிலிருந்து வேறுபட்டுப் பூரண உயர்வை எய்தி நிகரற்று விளங்குவது எதுவோ, அந்த சித்ரூப சக்தியே 'மனிதன்' என்று பொருள் கொள்வோமாயின், சாலப் பொருத்தமுடையதாயிருக்கும். அதுவே உண்மையான அர்த்தமுங்கூட. அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஏக வெளியாய் விளங்கும் இயற்கையின் மத்தியிலிருந்து எந்தச்சக்தி தனுகரண புவன போகங்களாக விரிந்து தோன்றுகின்றதோ, அதே பராசக்திதான் மனிதரின் இதயகமலத்துக்குள் குடிகொண்டு இயங்குகின்றது. அது அவனுக்கே உரித்தாகிய சொந்த வுடமை. மனிதன், தனது மூல அமைப்புக்குச் சொந்தமாயிருக்கும் அந்தச் சர்வ சக்தியை அறிந்துகொள்கிற வரையில் மிருகத்திற்குச் சமானனாகவே வாழக்கூடியவனாய் இருக்கிறான் அதை அறிந்து கொண்டுவிடிலோ, அந்தச் சக்தியினால் ஆட்டப் பெற்று துக்க ரூபமாயிருந்த மனிதன் சகல வஸ்துக்களையும் ஆட்டுகின்ற சர்வ சக்தனாய் எல்லாம் செய்ய வல்லவனாய் மகோந்நத நிலையை அடைந்து ஆனந்தமயமாக விளங்குகிறான். அவனைத்தவிர மந்திரவாதி யார்?

இதைக் கேட்கும்போது சிலருக்கு ஆச்சரியமாயிருக்கலாம். சிலருக்கு நம்பிக்கை யில்லாமல் அசட்டுச் சிரிப்பு உண்டாகலாம். அஞ்ஞானம் மறைத்திருப்பதால் ஆச்சரியமும் அவநம்பிக்கையும் உண்டாகின்றன. இயல்பாக என்றும் ஒரே தன்மையாய் இருக்கிற நமது சக்தியை நாம் அறிந்துகொள்வதே ஞானம். அதுவே மந்திரசக்தி. மனிதன் தனது முயற்சியினால் ஒரு புதிய சக்தியை சம்பாதிப்பதாக நினைப்பது பிசகு. தன்னிடம் இருந்ததை இல்லாததாக நினைத்திருந்தவன் ஞான கைவல்யத்தால் அச்சக்தியைக் கண்டு ஆச்சரியப்படலாம். அஞ்ஞானியோ அச்சக்தியைப்பற்றி கேலியான எண்ணமுடையவனாயிருக்கிறான். பிறவிக்குருடன் சூரியன் இருப்பதாகச் சொல்லப்படுவதைக் கேட்டு ஆச்சரியப்படுவான் அல்லது அச்சொல்லில் நம்பிக்கை வைக்காமல் சிரிப்பான்.

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

குழந்தை குட்டிகளைக் கவனிக்கவோ, எழுதவோ படிக்கவோ எரிச்சலாயிருக்கும். காரணமில்லாமல் துக்கம் சூழ்ந்து முகம் மூதேவியைக் கூப்பிட்டுக் கொண்டிருக்கும். சிலசமயம் உடம்பு நடுங்கும். முகம் சுரந்து வீங்கும். குரல் கம்மி வித்தியாசப்படும். அடிக்கடி நீர் பிரியும். விலாப்புறத்தில் வலிக்கும் கனமாயிருக்கும். கருப்பை கனத்து மர்மஸ்தானத்தில் தீவிர எரிச்சலேற்படும். காமாந்தகாரமான மனோ அலைகளும், [illegible]மூடித்தனமான சையோக உணர்ச்சியும் எழுந்து சுய அறிவைக் கலக்கி உடம்பை அனற்றும்.

மேற்கண்ட இத்தனை விஷயங்களில் ஏதேனும் ஒன்றோ பலவோ தீட்டு வருவதற்கு முன்னும் அந்தக் காலத்திலும் ஏற்படலாம். தீட்டு முழுகிய பின்னும் இந்தத் துர்க்குறிகள் அகலாதிருந்தால், அவசரமாக சிகிச்சை செய்துகொள்ள வேண்டும். தாமதம் செய்தால் மேலும் மேலும் நோய் விருத்தியாகி ஆபத்துண்டாகும்.

நிற்க மணி ஐந்தாகிவிட்டது. போஸ்டாபீஸில் கட்டுகட்டிவிடுவான் பாக்கி விஷயங்கள் பின்னால் எழுதுகிறேன். தாத்தாவுக்கு எனது நமஸ்காரம உனது மணிப் பயலுக்கு எனது அன்பான முத்தம்.

இப்படிக்கு,
'நீலாம்பிகை.'

---

## மதிப்புரை.

### 'பரதன்.'

எல். ஆர் எம். ராமசாமி அவர்களை ஆசிரியராகப் பெற்று மாதம் இருமுறை 10ந் தேதி 25ந் தேதிகளில் வெளிவரும். 'பரதன்' என்னும் தேசியப் பத்திரிகை வரப்பெற்றோம். அரசியல், உலகியல், கலையியல், சிறு கதைகள், இலக்கியக் கட்டுரைகள் முதலிய அரிய பொருள்களுடன் இனிய நவீன செந்தமிழ் நடையைப் பெற்றுத் தற்காலத்துக்கு ஏற்ற முறையில் வெளியிடப்படுகிறது.

வருட சந்தா ரூ. 1—8—0.
தனிப் பிரதி 0—1—0

கிடைக்குமிடம்:—
ஆசிரியர், 'பரதன்'
51-B. அரமனைக்காரத்தெரு,
சென்னை.

---

## வரப்பெற்றோம்.

### ஆனந்தபோதினி.

27 ஆண்டுகளுக்கு அதிகமாய்த் தமிழ் நாட்டிலும், தமிழர் குடிகொண்டிருக்கும் இவ்வுலகத்தின் எல்லாப் பாகங்களிலும் சென்று சேவை செய்கிற 'ஆனந்தபோதினி' என்னும் மாதாந்தர சஞ்சிகை 'எக்ஸ்சேஞ்சுக்காக' நமக்கு அனுப்பப்பெற்றமைக்கு நாம் மகிழ்ச்சி யடைகிறோம். ஆசிரியர், N. முனிசாமி முதலியார்.

விலாசம்:— வருட சந்தா 1—0—0.
ஆசிரியர், ஆனந்தபோதினி,
3. லாயர் சின்னத்தம்பி முதலி தெரு,
சென்னை.

### சிவநேசன்.

பதினைந்து ஆண்டுகளாய் [illegible] சமயத்தின் அபிவிருத்திக்காகப் [illegible] பட்டு வரும் 'சிவநேசன்' [illegible] மாதப் பத்திரிகை 'எக்ஸ்சேஞ்[illegible] நமக்கு அனுப்பப் பெற்றமை[illegible] மகிழ்ச்சியடைகிறோம். ஆ[illegible] ராம. க. ராம. ராமசாமி செட்[illegible]

வருட சந்தா ரூ. 1—8—[illegible]
தனிப் பிரதி 0—2—0[illegible]

விலாசம்:—
ஆசிரியர், சிவநேசன்[illegible]
திட்டை S. I.[illegible]



# இரண்டாவது மலர்.

---

எல்லாம்வல்ல இறைவனருளால் நமது முதலாவது ஆண்டுவிழா இனிது நடைபெற்றது. தமிழ்ப்பெருந் தலைவரும், சைவசித்தாந்த ஆகமநூற் புலவரும், சைவ நெறிக்கண் இனிது செல்லுந் தவச்சிரேட்டருமான திருத் துடிசைக்கிழார் **அ. சிதம்பர முதலியார்** அவர்கள் ஆரோகணம் செய்து வைத்த சித்தர் மணிக்கொடி அதோ வெற்றித் தென்றலில் சிலுசிலுவென்று அழகை அள்ளிக்கொண்டு வீசுகின்றது! தூய வெண்மையான வன்னம்; அதன் மத்தியில் உலகத்தை ஆக்கி அளித்து விரிக்கும் ஓங்கார மந்திரம்! பாரத நாட்டின் மருத்துவ இயக்கத்திற்குப் பொருத்தமான கொடி! அகத்தியன் முதல் பக்கத்தில் பிரசுரிக்கப் பெற்றிருக்கும் பாட்டுடன் நமது வைத்தியர்கள் கொடி வணக்கம் செய்தனர். இப்பாட்டு ஒவ்வொரு சித்த வைத்திய சபைகளிலும் வழக்காற்றுக்கு வரவேண்டுமென்பது துடிசைகிழாரின் விருப்பமாகும். நமது பெரியார் கொடியேற்றி வைத்ததின் அதிர்ஷ்டவசமாக இந்த இரண்டாவது மலர் இரண்டாயிரம் அங்கத்தினர்களுக்கிடையில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் என்று நம்புகிறோம்!

பல வருடங்களாக தமிழ் வைத்தியத்திற்காக இடையறாது சேவை செய்து வருபவரும் தமிழரசு ஆசிரியரும், தமிழ் வைத்தியத்தில் பெரும் புலமை வாய்ந்தவருமான திரு. **மே. மாசிலாமணி முதலியார்** அவர்கள் தலைமை வகித்தது ஆற்றிய சொற்பொழிவு நமது வைத்திய பண்டிதர்களுக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளித்திருக்கிறது. திருவாளர் C. K. குமாரசாமிப் பிள்ளை, சுவாமி ஷத்கிரி ஷண்முகானந்தன் முதலிய தலைவர்களின் சேவை பாராட்டத் தக்கது.

எமது வேண்டுகோட்கிணங்கி மேற்படி விழாவைச் சிறப்பித்தலின் மூலியமாய் தமிழ் வைத்திய உலகத்திற்குச் செய்த சேவையைப் பாராட்டி நன்றி கூறுகின்றோம். இவ்விழாவை முன்னிட்டு வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய கவர்ன்மெண்டு அஸிஸ்டெண்ட் லெக்சரரும், காலஞ்சென்ற வைத்திய ரத்னம் Dr. முருகேச முதலியார் அவர்களின் குமாரருமாகிய Dr. உத்தமராய முதலியார், திருவாரூர் Dr. ஜி. கண்ணுசாமி பிள்ளை, Dr. லெட்சுமிபதி, நவஇந்தியா ஆசிரியர் T. S. தியாகராஜ ஞானியார், Dr. N. சுப்ரமண்யம், Dr. தேவராஜ முதலியார், Dr. G A. சின்னு, கண்டனூர் கதி. பழணியப்ப செட்டியார், Dr. N. தண்டபாணிப் பிள்ளை முதலிய பிரமுகர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கூட்டத்தில் எட்டு முக்கிய தீர்மானங்கள் நிறைவேறி யிருக்கின்றன. அவை அடுத்த இதழில் பிரசுரிக்கப் பெறும். அவற்றுள், இரண்டாவது தீர்மானம், யார் யார் எந்தெந்த தொகுதியின்பேரில் இந்தியன் மெடிக்கல் போர்டு மெம்பர்களாக அங்கம் வகித்துவருகிறார்களோ, அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் தொகுதியில் 500 சந்தாதாரருக்குக் குறையாமல் சேர்த்துக் கொடுக்கும் உதவியைச் செய்ய வேண்டுமென்று கோரியிருக்கிறது. ஆதலின் மெடிக்கல் போர்டு மெம்பர்கள் அனைவரும் மேற்படித் தீர்மானத்தை காரியத்தில் நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தமிழ் வைத்திய உலகத்தின் நித்திரையைக் கலைத்துத் தூண்டி எழுப்பிய திரு. ஜி. கண்ணுசாமி பிள்ளை நமது பத்திரிகையின் ஐக்ய ஆசிரியராயிருந்தும், ஆண்டுவிழாவில் கலந்து கொள்ள ஏலாதவண்ணம் நோயுற்றிருப்பதற்கு யாரும் வருந்தாமலிருக்க முடியாது. மேற்படி பெரியாருக்கு ‘வைத்திய ரத்னம்’ என்ற பட்டத்தை அளிக்கும்படி அலங்கியம் Dr N. சுப்ரமண்யம் கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது நமக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

இவை போன்ற ஆனந்தமயமான நிகழ்ச்சிகள் புடைசூழ நமது இரண்டாவது ஆண்டு ஆரம்பமாகிறது. 20,000 தமிழ் வைத்தியர்கள் நிறைந்த நமது உலகம் இவ்வாண்டில் அகத்தியனை எவ்வாறு ஆதரிக்கப்போகிறது என்பது மெடிகல்போர்டு மெம்பர்களின் தயவைப்பொருத்திருக்கிறது. உயிர்தோறும் உண்ணின்றுணர்த்தும் திருவருள் நமது முயற்சிக்கு பக்கபலமளித்து நமது காரியங்கள் அனைத்தையும் இனிது கைகூடும் வண்ணம் ஆக்குமாக!

## முக்கிய அறிவிப்பு.

:0:

1942-ம் ஆண்டுக்கு உரிய சந்தாத் தொகை 1—0—0 ரூபாவை உடனே அனுப்பி வைக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம். பிப்ரவரி மாதத்திலிருந்து கணக்கு வைத்துக் கொள்ளப்படும்.

ஆசிரியர்.

## சந்தாதாரர்களுக்கு

சென்ற ஆண்டு பூராவும் பத்திரிகை பெற்றுக்கொண்டவர்களில் பலர் நாளது வரையில் நமது சந்தாவை செலுத்தவில்லை. சென்னைமகாநாட்டில் ஆசிரியரை நேரில்கண்டு பத்திரிகை அனுப்பும்படி சொன்னவர்களும், கடிமூலியமாய் பத்திரிகை அனுப்பும்படி எழுதியவர்களும் சந்தா செலுத்தவில்லை. சுவாமி நித்யானந்தம், திரு. S G. சுந்தரம் போன்ற பெரியார்களின் வார்த்தையின் பேரில் அனுப்பிய பத்திரிகைகளுக்கும் சந்தா கிடைக்கவில்லை. இது விஷயத்தைக் கவனித்து உடனே சந்தாவை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

வியாபார விருத்திக்குச் சிறந்த
ந[illegible]பன்
“அகஸ்தியன்”

# இலகு வைத்தியப் பகுதி.

ஸ்ரீமதி K. சுந்தரத்தம்மாள், R. I. M., M. C., திருவாரூர்.

## பதார்த்த குணவியல்.

பதார்த்தங்களில் நிறைந்திருக்கும் குணாகுணங்களைத் தெரிந்து கொள்ளவேண்டுவது மிகவும் அவசியம். அதிலும் சமையல்செய்து அன்புடன் அமுதளிக்கும் மடமகளிர் அத்யாவசியமாய் உணர்ந்திருக்கவேண்டும். ஆண் மக்கள் வேறுவேறு கர்மங்களில் ஈடுபட்டு அவர்தஞ் சிந்தனை பல துறைகளில் பதிந்திருக்கக்கூடும். உணவின் குணாகுணங்களைப் பற்றி ஆராய்ந்துகொண்டிருக்க சாவகாசமில்லாமல் இருக்கலாம். ஆனால், வைத்தியத்தொழில் செய்கிறவர்களுக்கு பதார்த்த குணந்தானே பிள்ளையார் குட்டு! அவர்களுக்குமட்டும் அத்யாவசியந்தான்.

உணவு தெரிந்தெடுப்பதால் நாம் நோய்வாய்ப்படாது தப்பலாம். சந்தர்ப்பப் பேதத்தால் நோய்வாய்ப்படினும் உணவு மூலமாகவே அதனைத் தவிர்த்துக் கொள்ளலாம். இந்த உயர்ந்த நோக்கங்களைக் கொண்டே அந்தந்த நாட்டின் சீதோஷ்ண நிலைகளுக்கு ஏற்றவாறு உண்டி வகைகளை முன்காலத்தில் விதந்தெடுத்து ஓதியுள்ளனர். பதார்த்த குணம் போதிக்கும் பாட்டிகள் இறந்தொழிந்தனர். பேத்திமார்களோ கோணவடு முன்கொசுவம் நாணகறல் முதலிய நவநாகரிகமடைந்த புத்திசாலிகளாய் வயதுமுதிர்ந்த மூதாட்டிகளைக் கர்நாடகம் என்று அவமதித்து அவர் சொல் செவிமடுக்க மறுத்துப் பேதைகளாய் உதவாக்கரைகளாய் விளங்குகின்றனர். குருகுல வாசமின்றித் தான்தோன்றிகளாய் வெளிக்கிளம்பும் போலி வைத்தியர்களும் பதார்த்த குணங் கல்லாது தமிழ் மருந்தின் கீர்த்திக்கு முக்காடுபோட்டு வருகின்றனர். நம்மிடமுள்ள குறைகளை ஆராய்ந்து அவற்றைக்களைதல் நம் கடனாதலின், இதனை இங்குக் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

சத்திரங் கட்டியவன் அதனை இடியாமல் சரியாமல் பாதுகாப்பானேயல்லாது, ஒருபொழுது தங்கிப்போகிற பாதசாரிகளெல்லாம் சத்திரத்தைப்பற்றிக் கவலைப்படமாட்டார்கள். அதைப்போலவே, இந்தப் பரந்த தேசத்தில் பிறந்த மக்கள்தான் இந்நாட்டிற்குரிய கலைகளைப் பேணி வளர்ப்பார்களேயன்றி அந்நியருக்கு அந்தக் கவலை வராது. இந்நாடு அந்நியர் கையிற் சிக்குண்டு விட்டதால் எடுத்ததற்கெல்லாம் அந்நிய வைத்தியமே தலையெடுக்கத் துவங்கி நமது வைத்தியம் பாதாளத்தில் தள்ளப்படுகிறது. வீட்டுவைத்தியம் அழிந்ததற்கு இதுவே அடிப்படையான காரணம் என்பதை யுணர்க. காப்பி தேயிலை, கொக்கோ முதலிய விஷபானங்கள் எங்கிலும் மலிந்து நம் நாட்டிற் பிறந்த தேவமக்களை மயானத்தில் உலவுகின்ற குறைகொள்ளிப் பிசாசுகளைப் போல உருக்குலைத்துவிட்டன. நம்முடைய சர்க்காராய் யிருந்தால் இந்த விபரீதத்தைத் தடுத்துக் காத்திருக்குமல்லவா? இந்நாட்டுக்குத் தினைசிறிதுந் தகுதியற்ற சுருட்டு, பீடி, சிகரெட்டு, சாராயம் முதலிய விஷலாகிரி வஸ்துக்களையும் தடைசெய்திருக்கவேண்டும். குப்பை கூட்டி சுத்தம் செய்வது மட்டிலும் சுகாதாரமா?

நம்நாட்டுப் பழக்க வழக்கங்களை அனுசரித்திருந்தால், லேடி லின்லித்கோவின் க்ஷயரோக நிவாரணத்திற்கு ஏராளமான பணத்தை நன்கொடையாகக் கொடுக்கவேண்டிய அவசியம் இருந்திராது. நமது ஆசாரங்களும் அனுஷ்டானங்களும் புண்ணிய விரதாதிகளும் சுகாதாரத்தை அஸ்திவாரமாகக்கொண்டே அமைந்திருக்கின்றன. ஏகாதசி விரதத்தை மூட நம்பிக்கை என்று கேலிசெய்த இங்கிலீஷ் ஸ்டைலிஷ்-கள், அமெரிக்க ஆசிரியர் மிஸ்டர் ஸிங்கிளேர் எழுதிய உபவாச சிகிச்சை (Fasting Cure) என்ற அரிய நூலைப் படித்துவிட்டுப் பட்டினி கிடக்கத் துவங்குகிறார்கள். 'லங்கணம் பரமௌஷதம்' என்றபடி ஓயாமல் வேலைசெய்து களைத்திருக்கும் குடலுக்கு ஓய்வு கொடுப்பதற்காக ஏகாதசி கார்த்திகை முதலிய விரதங்களை அனுஷ்டிக்கும்படி நமது முன்னோர்கள் செய்திருந்த ஏற்பாடுகள் எவ்வளவு சிறப்புடையது என்பதைக் காண்க. இனிப் பதார்த்தங்களில் உள்ள முக்கிய குணங்களில் சிலவற்றைச் சுருக்கமாகக் கூறுவோம்.

வாழைத்தண்டு கல் மண் மயிர் இவைகளைச் சீரணம்செய்து வெளிப்படுத்தும். வாழைப்பூ உடற் புண்களை ஆற்றும். பொன்னாங்காணி கண்ணொளியை விசேஷப்படுத்தும். பொடுதலை பாற்சுத்தி, முதலியவை மூலக்கனலை தணிக்கும். மணத்தக்காளி உடற் புண், கபம் இவைகளைப் போக்கும். முள்ளங்கி குடல்வாயு போக்கி ஜீரண பலந்தரும். பாவக்காயும், பூஷணிக்காயும் பலவிதத்திலும் உடலில் சேரும் விஷச்சத்துக்களைக் கழிக்கும். மாங்காய் ஜீரணசக்தி கொடுக்கும். கருவேப்பிலை அதிசாரம் நீக்கும். முருங்கப்பூ தாது பலந்தரும். மல்லி பித்தாதிக்கத்தைச் சமனம் செய்யும். விளாம்பழத்திற்கும் இக்குணம் உண்டு. உளுந்தும் கடலையும் மாமிசத்தை வளர்க்கும். இலந்தைப்பழம் செறிமான சக்தியைக் கொடுத்து அரோசிகம் நீக்கும். தயிர் பால் நெய் வெண்ணெய் முதலியவை தேகத்தின் சகல உறுப்புகளுக்கும் போஷாக்குத் தரும். வெண்டிக்காய் கெந்தக சத்துள்ளதாதலின் மேகநீரை வற்றச்செய்யும். இஞ்சியும் ஓமமும் குன்மம் அஜீர்ணம் வயிற்றுவலி அதிசாரம் முதலான வியாதிகளைக் கண்டிக்கும். பசலை குண்டிக்காய் மூத்திரப்பை இவற்றில் உண்டாகும் உஷ்ணம் வேக்காடு வீக்கம் முதலிய நோய்களைப் போக்கும்.


## ஏஜண்டுகள் தேவை.

—o0o—

எல்லா இடங்களிலும் அகஸ்தியனை விற்பனை செய்வதற்கு ஏஜண்டுகள் தேவை! தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்! விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,

அகஸ்தியன் ஆபீஸ்,

திருத்துறைப்பூண்டி.

தொடர் கதை.

# உதயசங்கரன்
## அல்லது
# அமராவதி இளவரசன்.

- நாகை என். பாலசுப்ரமண்யம். -

பதிப்புரிமை கதாசிரியனுடையது.
(Copyright to the Author of this Novel)

[பல்லாவரம் மறைமலையடிகளின் பிரதம மாணவரும், கனகாங்கி, சதானந்தர், திருக்குறள் தண்டபாணி விருத்தி முதலிய அரிய நூற்களின் ஆசிரியருமான நாகை சோ. தண்டபாணிப் பிள்ளை அவர்களின் சகோதரி புதல்வராகிய இந்நூலாசிரியர், இக்கதையின்மூலம் வாழ்க்கைச் சித்திரங்களை வெகு அழகாக விளக்கியிருக்கிறார். இவ்விதழிலிருந்து இஃது தொடர்ந்து வெளிவரும்.—ஆசிரியர்.]

### 1. ஜோதிவிலாசம்.

'பூம் பூம்' என்று இனிய நாதம் எழுந்து வானத்தில் உறைந்தது. அடுத்த நிமிஷம் மாளிகையின் உள் முகப்பில் மோட்டார்க்கார் நிறுத்தப் பட்டது. 'டபாலி' தாங்கிய மெய் காப்பாளர் கதவைத் திறந்துவிட்டு பணிவுகாட்டி ஒதுங்கி நின்றனர். இளவரசர் உதயசங்கர முதலியார் டாம்பீகமாகக் கீழே இறங்கினார். ஜோதி விலாசத்து சிப்பந்திகள் உடம்புகுன்ன நடுங்கி நின்று மரியாதை செலுத்தினர். இளவரசர் அவர்களைச் சிறிதும் ஏறிட்டுப் பாராமல் சீமைச்சோடு 'டக்கு டக்கென்று' தாளம்போட வெகு சொகுசாக மாளிகையின் உட்புறம் நோக்கிச் சென்றார்.

இளவரசரைக் கண்ட தனபால முதலியார் திடுக்குற்று நாற்காலியிலிருந்து நிமிர்ந்து கண்ணாடியைக் கழற்றிக்கொண்டு, "வாருங்கள்! வாருங்கள்!!" என்று பரிவுடன் உபசரித்து 'குஷன்' சோபாவில் அமரும்படிச் செய்தார். உள்கட்டில் பூஜை செய்து கொண்டிருந்த சுந்தரத்தண்ணியும் புளகாங்கிதமடைந்தவளாய் விரைந்து வந்து இளவரசரை வரவேற்று உபசரித்தாள்.

இளவரசர் கோட்டைக் களைந்து சோபாவில் வீசி எறிந்தார். அருகில் நின்ற பணியாளன் அதை வெகு மரியாதையாகத் தொட்டெடுத்து கோட்டு ஸ்டாண்டில் மாட்டினான். உதயசங்கரர் ஷர்ட்டு பித்தான்களைத் திறந்துவிட்டு மின்சார விசிறியில் ஆனந்தமாகக் காற்று வாங்கினார்

"சுந்தரம்! முருகையனைக் கூப்பிட்டு காப்பிக்கொண்டுவரச் சொல்!" என்று தனபால முதலியார் தனது தர்ம பத்தினியை ஏவினார்.

"தம்பீ, தந்த சுத்தி ஆச்சா?" என்று சுந்தரவல்லி இளவரசரை விசாரித்தாள்.

இளவரசர் பட்டுக்கைக்குட்டையால் முகத்தைத்துடைத்துக்கொண்டு, "இல்லை" என்று அமர்த்தலாகத் தலையை அசைத்தார். உடனே இளவரசரின் பணியாளன் ஒருவன் பெட்டியைத்திறந்து 'ஹைட்ரோஜன் பிராக்ஸைட்' 'டூத் பேஸ்டு' பல் விளக்கும் 'பிரஷ்' முதலியவைகளை எடுத்துக் கொண்டுவந்து இளவரசரின் பக்கத்திலகிடந்த வட்டமேஜைமீது வைத்தான். ஜோதி விலாசத்தின் வேலைக்காரன் ஒருவன் அடியில் சக்கரம் அமைந்த வெந்நீர்த்தாங்கியை தள்ளிக்கொண்டுவந்து பக்கத்தில் நிறுத்தினான். மேற்படி தாங்கிக் குழாயின் கீழ் பீங்கான் தொட்டி அமைக்கப் பெற்றுக் கை கழுவுவதற்கும் வாய் கொப்பளிப்பதற்கும் வசதி செய்யப் பட்டிருந்தது. இளவரசர் மூன்று நிமிஷத்துக்குள் தந்த சுத்தியை முடித்துக் கொண்டு, சலவைசெய்த டவலினால் முகத்தை துடைத்தார். இதற்குள்ளாக பரிசாரகன் சீமைரொட்டிகளும் பசுவெண்ணெயும் பழவர்க்கங்களும் வெள்ளிப்பாத்திரத்தில் பசும்பால் காப்பியும் கொண்டுவந்து வைத்தான்.

"நீங்கள் சாப்பிடவில்லையா மாமா?" என்று இளவரசர் தனபால முதலியாரைக்கேட்டார்.

"இல்லை தம்பீ, காலைநேரத்தில் வெறுங்காப்பிதான் சாப்பிடுவது வழக்கம்!" என்றார் தனபால முதலியார்.

"இப்பொழுது எங்கிருந்து வருகிறாய்? சென்னையிலிருந்தா?" என்றாள் சுந்தரத்தண்ணி.

"இல்லை, அமராவதியிலிருந்து வருகிறேன். அமராவதிக்குச் சென்னையிலிருந்து வந்து ஒரு மாசத்துக்கு மேலாகிறது." என்றார் உதயசங்கரர்.

"ஏது ஒரு மாசம் வரையில் அமராவதியில் தங்கிவிட்டது. அண்ணா சௌக்கியந்தானே! மதனி எப்படி இருக்கிறாள்? ஜானகி ஸ்ரீரங்கத்தில் தானே இருக்கிறாள்?" என்று கேள்விக்குமேல் கேள்வி அடுக்கிக்கொண்டு போனாள் சுந்தரம்.

"அப்பாவுக்குப் பலஹீனம் ஜாஸ்தியாய்ப் போய்விட்டது. இராமுழுவதும் 'லொக்கு லொக்கென்று' இருமுகிறார். அண்ணி அதற்கு மேலாகத் தானிருக்கிறது" என்றார் இளவரசர்.

"சென்னை சட்டசபைத் தேர்தல் வருகிறாப்போல் இருக்கிறதே." என்றார் தனபால முதலியார். இளவரசர் கை கழுவிவிட்டு காப்பியை எடுத்து உறிஞ்சினார்.

இச்சமயம் உள் கட்டிலிருந்து சங்கராபரண ராகத்தின் கமகங்களும் பிடிப்புகளும் வெகு நயமாக அகன்று பரந்த கூடத்திற்குள் பிரவேசித்து எல்லோரையும் பரவசப்படுத்தியது. சங்கீதம் என்றால் இளவரசருக்கு உயிர். பகட்டுக்காக சங்கீதம் கேட்பவர் அவரல்ல. மிதமிஞ்சிய செல்வச்செருக்கினால் திளைத்து இறுமாந்துபோயிருந்தாலும் கலைகளை அனுபவிக்கும் உணர்ச்சியையும் ஆண்டவன் அவருக்கு அருளியிருந்தான்.

வந்தே மாதரமென்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குது
மென்போம்

என்னும் பாரதியாரின் சுவை ததும்

## உதயசங்கரன்
அல்லது
## அமராவதி இளவரசன்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி.)

பும் இனிய பாட்டு சங்கராபரண ராகத்தில் உணர்ச்சிமேலிடப் பாடப்பட்டது அவருக்குப் பரமானந்தத்தை விளைவித்துவிட்டது. முழுவதும் பாடி நிறுத்தியதும் அதைப் பாடியது யார் என்று அவருக்கு ரொம்ப ஆச்சரியமாயிருந்தது.

"அத்தை, உள்ளே பாடுகிறது யார்? திலகவதியா?" என்று மிகுந்த ஆர்வத்துடன் வினவினர். இதைக் கேட்டுக்கொண்டே திலகவதி அங்கு வந்து சேர்ந்தாள். இளவரசரைக் கண்டவுடன் மனமகிழ்ந்தவளாய், "வாருங்கள். வாருங்கள்! இப்பொழுதுதான் வந்தீர்களோ அத்தான்?" என்று அவள் அன்பு ததும்ப உசாவினாள்.

"இப்பொழுதுதான் வந்தேன் உள்கட்டில் வந்தேமாதரம் பாடியது நீதானா?" என்றார் இளவரசர்.

"அடடா! இந்தக்கட்டைக்கு அவ்வளவுதூரம் வந்துவிட்டதா என்ன? என் பாட்டு உங்களுக்கு தெரியாத மாதிரி கேட்கிறீர்களே!" என்றாள் திலகவதி.

"பின்னை—? யார்?"

"பானுமதி!"

"பானுமதியா? பா....னு... ம...தியா? இவ்வளவு அருமையாகப் பாடினது? அவளைப் பார்த்து ரொம்பநாள் ஆச்சு ஆம். சுமார் ஏழு வருஷமிருக்கலாம்!"

"அத்தானுக்குச் சங்கீதமென்றால் பைத்தியம் என்று தெரியுமே!" என்றாள் திலகவதி.

"சங்கீதம் பிடிக்காத ஜென்மமும் உலகத்தில் உண்டா?" என்றாள் சுந்தரவல்லி.

"ஏன்? அவுரங்கஸீப் இல்லையா?" என்றாள் திலகவதி.

உதயசங்கரர் சோபாவில் நன்றாகச் சாய்ந்துகொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். இடை இடையே சுந்தரவல்லிக்கும் திலகவதிக்கும் பதிலளிக்க மறக்கவில்லை. தனபால முதலியார் மட்டும் இவர்கள் சம்பாஷணையில் அதிகமாய்க் கலந்துகொள்ளாமல் தினசரிப் பத்திரிகையை ஊன்றிப் படித்துக்கொண்டிருந்தார்.

"அத்தான், ஜானகி ஸ்ரீரங்கத்திலிருந்து அமராவதிக்கு வரவே இல்லையா?" என்று இளவரசரின் சொந்த சகோதரியைப் பற்றித் திலகவதி விசாரித்தாள்.

"ஜானகியின் புருஷன்தான் காங்கிரஸ் பைத்தியம் பிடித்து அலைகிறானே! காங்கிரஸ் என்றால் அப்பாவுக்கு நஞ்சு! இதனால் வசந்தனுக்கும் அப்பாவுக்கும் அபிப்பிராய பேதம் இருந்துவருகிறது. ஆகையால் ஜானகியை அடிக்கடி வரவழைக்க முடியவில்லை" என்றார் இளவரசர்.

"இருக்கிற சொத்தைத் தொலைக்க வேணுமோ இல்லையோ? பாவம்! ஜானகிக்கு இந்தமாதிரி புருஷன் வாய்க்கக் கூடாது!" என்று சுந்தரவல்லி பச்சாதாபமடைந்தாள்.

தனபால முதலியார் தினசரியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு, "சென்னை சட்டசபை எலக்ஷனுக்குத் தாங்கள் அபேக்ஷகராக நிற்கப்போகிறீர்களா?" என்று உதயசங்கர முதலியாரை வினவினர்.

"அப்படித்தான் உத்தேசம். காங்கிரஸ்காரர்களும் இப்பொழுது இந்தப் புதிய சட்டத்தின்கீழ் பதவி ஏற்கப்போகிற விஷயம் தெரியுமே! இந்தக் காங்கிரஸ் ஜம்பம் நம்மிடம் பலிக்கவா போகிறது!"

"ஏதோ பார்க்கலாம்!"

"வோட்டுரிமை ஜாஸ்தியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது! இப்பொழுதுதான் அத்தான் ஜெயிக்கிறதைப் பார்க்கவேண்டும். அதுவும் காங்கிரஸ் எதிர்ப்பை நீங்கள் சமாளிக்க முடிகிறதா என்பது இப்பொழுதுதான் தெரியப்போகிறது!" என்றாள் திலகவதி. அவள் அம்மாதிரி குறும்புத்தனமாய்ப் பேசியது சுந்தரவல்லிக்குப் பிடிக்கவில்லை. கண்களை உருட்டி உறுத்துப் பார்த்துத் தனது புத்திரியைக் கண்டித்தாள். இளவரசருக்கு வாஸ்தவத்தில் கன்னகடூரமான கோபம். கண்களில் இரத்தம் பறந்தது. தனபால முதலியார் பல சம்பாஷணைகளை இழுத்து இளவரசரின் கோபத்தை மாற்றுவதற்கு முயன்றார்.

"பண்டித ஜவஹர்லால் நேரு தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து காங்கிரஸ் தேர்தல் பிரசாரம் செய்யப் போவதாய் தினசரியில் செய்தி வந்திருக்கிறது!" என்றார் தனபால முதலியார்.

"யார் வந்து என்ன செய்ய முடியும்? நமது பலம் நம்மிடந்தானே இருக்கும்!" என்றார் இளவரசர்.

தனபால முதலியார் போலீஸ் கமிஷனர் பதவியிலிருந்து ரிட்டயர் ஆனதுமுதல் தனது சொந்த ஊராகிய திருவீழிமிழலையில் தனது சொந்த மாளிகையாகிய ஜோதி விலாசத்திலேயே வாசம் செய்து வருகிறார். இந்த இரண்டு வருஷமாகத்தான் அவர் ஜோலியில்லாமல் அமைதியாகக் காலங்கழித்து வருகிறார். சென்ற காங்கிரஸ் போராட்டங்களை வெகு சுலபமாக அடக்கி அமைதியை நிலைநிறுத்திய பெருமை மேற்படி முதலியாருக்கு ரொம்ப சொந்தம்; அது அவருக்கு ஒரு தனி அந்தஸ்தைக் கொடுத்தது. முதலியாரின் புத்திநுட்பத்தை மெச்சியும், போலீஸ் இலாகாவில் துணிவுகொண்டு ஆற்றிய பணியைப் பாராட்டியும், சர்க்காரின் உண்மையான ஊழியர் என்பதை ஒட்டியும் அவருக்கு நமது சர்க்கார் நவநவமான பட்டங்களை அருளியிருந்தது. கடைசி காலத்தில் அவர் பெற்ற பட்டம் திவான்பகதூர். அமராவதி இளவரசருக்கு அத்தை புருஷன் என்பதில் எல்லாவற்றையுங் காட்டிலும் அவருக்கு அதிக பெருமை. அமராவதி ஜமீன்தார் கிருஷ்ணசாமி முதலியார் தனது கொள்கையை ஒட்டி காங்கிரஸ் துவேஷியாய் இருப்பது அவருக்கு அதைவிடப் பெருமையாய் இருந்தது.


### சந்தா விகிதம்.

| | |
|---|---|
| ஆயுள் சந்தா | ரூ. 25—0—0 |
| உள்நாடு ஒரு வருடம் | 1—0—0 |
| வெளிநாடு ஒரு வருடம் | 2—0—0 |
| தனிப்பிரதி | 0—1—6 |

### விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| வெளியட்டை (ஒரு தடவை) | ரூ. 25—0—0 |
| உள் அட்டை ,, | 20—0—0 |
| அரைப் பக்கம் ,, | 10—0—0 |
| கால் பக்கம் ,, | 5—0—0 |

தொடர்ந்து விளம்பரஞ் செய்ய விரும்புவோர்களுக்குத் தனி விகித விபரம் தரப்படும்.

# பரமஹம்ஸரின் பக்திரச நாடகம்.

*SRI RAMAKRISHNA-A-DRAMA.*

## "ராமகிருஷ்ண பரமஹம்ஸர்."

All rights reserved.

ஆக்கியோன்:— T. M. U. பதி, திருத்துறைப்பூண்டி.

(எல்லா உரிமைகளும் ஆக்கியோருடையவை.)

சுவாமிகள்:— இருதயர் சட்டையோடே, எட்டி எறிந்துவிடு. (இருதயரும் தூர எறிந்து விடுகிறார். பொன்னும் மண்ணோடு சேர்ந்து விடுகிறது.)

சீன். (54.)

(சிலவருஷம் சென்ற பின்.)

இடம்:— காளியின் கோவில்

காலம்:— காலை.

பாத்திரங்கள்:— ராமகிருஷ்ணர்—இருதயர் (வயது 36, 40)

(இருதயர் வெளியே யிருந்து அழுது கொண்டு வருகிறார்)

சுவாமிகள்:— இருதயா ஏன் அழுகிறாய்? உனக்கு என்ன துன்பம் நேரிட்டது?

இருதயர்:— சுவாமி! அம்மா இறந்து விட்டார்களாம்.

ராமகிருஷ்ணர்:— இருதயரே! நீயோ, ஒரே பிள்ளை இதற்குத்தான் நான் உன்னை என்கூட வரவேண்டாமென்றேன். நீ கேட்காமல் வந்து விட்டாய் சரி உடனே நீ ஊருக்குப் புறப்படு.

இருதயர்:— சுவாமி! என் தாயார் அல்ல. நம்ம அம்மா சந்திராமணி தேவி.

சுவாமிகள்:— என்ன! நம் லோக மாதா, சந்திராமணிதேவியா? (அப்படியே பிரமித்து நின்றுவிடுகிறார் உடனே காளியின் முன்னின்று பாடுகிறார். பிறகு) ஏதேவி! எனக்காகக் கவலைப்படும் ஜீவன்களில் தந்தையையும், தமையனையும், லோகமாதாவாகிய ராணி ராசாமணி தேவியையும், அவர் மருமகன் அன்பர் மதுராதரையும் இழந்தேன், இதுபோது என்னைப்பெற்ற மாதாவையும் இழந்தேன். இனி எனக்காகக் கவலைப்படும் ஜீவன் உன்னைத்தவிர வேறு இல்லை என்றே நினைக்கிறேன். (அசரீரி பக்தா இல்லை. இன்னொரு ஜீவன் உன் மனைவி இருக்கிறாள். அவள் சிலநாளில் உன்னை அடைவாள்.)

ராமகிருஷ்ணர்:— தேவி! அது ஒரு பந்தமா எனக்கு இருக்கிறது? ஆயி, அதையும் நீதான் தவிர்த்து வைக்க வேண்டும்.

சீன் (55)

இடம்:— காளியம்மன் கோவில்.

காலம்:— இரவு

பாத்திரங்கள்:— ராமகிருஷ்ணர்—இருதயர்—சாரதாமணிதேவி (வயது 18, 20 சாரதாமணிதேவி சுவாமியின்முன் வருகிறார் சுவாமி கண்டு.)

சுவாமிகள்:— வா அம்மா! நீயும் வந்துவிட்டாயா? உட்காரு. "சாரதாமணி உன்னை அன்று திருமணம் செய்துகொண்ட கதாதரன் அல்ல இவன். இதுபோது இவன் பற்றற்ற பரதேசி, ராமகிருஷ்ணன்"

சாரதாமணிதேவி:— சுவாமி! நான் முன் காமர்புகூரில் சந்தித்தபோதே என் எண்ணம் மாறி ஏவல் செய்ததை மறக்கவில்லை. இதுபோதும் அந்த ஏவல்வேலை செய்யவந்தேனே தவிர, தங்களைத் திருப்பி என் வசமாக்க வரவில்லை.

ராமகிருஷ்ணர்:— சந்தோஷம்! நீயே! தேவி அம்சம். தாராளமாய் இருக்கலாம்.

(வெகுகாலம் அம்மையாரும் சுவாமிகளுக்கு சிஷ்யராயிருந்தார்கள்)

## குருவும்—சிஷ்யர்களும் உபதேசம்.

சீன் (56.)

இடம்:— தக்கணேஸ்வரம் கோவில்

ம:— ஸ்வாமி! ஈஸ்வரனை ரூபமுடையவராகப் பூஜை செய்வோமென்றால், விக்கிரகங்கள் அநேகமாய் மண்ணாலேயும், கல்லாலேயும், உலோகங்களாலேயுந்தானே செய்யப்பட்டிருக்கின்றன?

பகவான்:— நீ, ஏன் அவைகளை மண்ணினாலேயும், மற்றப் பொருள்களினாலேயும், செய்யப்பட்ட விக்கிரகங்கள் என்று நினைக்கவேண்டும்? நிச்சயமாக தெய்வ ஸ்ரூபமென்றும் இன்பமயமானதென்றும் ஏன் நினைக்கக்கூடாது?

ம:— ஸ்வாமி! ஓர் கிருஹஸ்தன் இவ்வுலகில் எம்மாதிரி நடந்துகொள்ள வேண்டும்.

பகவான்:— நீ, உன் மனதை யெல்லாம் ஈஸ்வரனிடம் செலுத்தி, நீ செய்யவேண்டிய கடமைகளைச் செய். உன் பெற்றோர், மனைவி, மக்களை உன் சொந்தம்போல் பாவித்து அவர்களுக்கான உன் கடமையை செய்; ஆனால் நீ, உன் அந்தரங்கத்தில் அவர்களைச் சொந்தமல்ல வென்றறி. அல்லது அவர்களும், பகவானைப் பஜிப்பவர்களாயிருந்தால் உன் சொந்தமாகப் பாவிக்கலாம். பகவான் ஒருவரே உனக்கு நிஜமாகச் சொந்தமானவர். அவருடைய பக்தர்களும் அப்படியே.

ம:— ஸ்வாமி! பகவானைப் பார்க்க முடியுமா?

பகவான்:— நிச்சயம், முடியும். அதைப்பற்றிச் சந்தேகமே வேண்டாம். 'பகவானைப் பார்ப்பதற்கு இவை சில முக்கிய சாதனங்கள்:— ஏகாந்தத்தில் அடிக்கடியே யிருந்து, பகவத்தியானம் செய்தல்; அவருடைய அனந்த கல்யாணகுணங்களையும், திருநாமங்களையும் இடைவிடாமல் உச்சரித்துக் கொண்டேயிருத்தல்; விவேகவிசாரணைக்காகப் பிரயாசைப்படுதல்; ஊக்கத்துடன், அதி தீவிரமாக 'பகவானை நினைந்து ருகித்தோத்திரம் செய்து பிரார்த்திக்கவேண்டும்.

(முன் பக்கத் தொடர்ச்சி.)

நரேந்திரர்:— ஸ்வாமி! துஷ்டர் நம்மை தொந்திரவு செய்தாலோ அல்லது, பிறருக்குத்தீங்கு செய்தாலோ நாம் சும்மாதானிருக்க வேண்டுமோ?

பகவான்:— ஜன சமூகத்திலிருக்கும் ஒருவன் அதிலும் நகரவாசியாகிய ஒரு கிரகஸ்தன், தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவேண்டி துஷ்டர்களை நிக்ரஹம் செய்பவனைப் போல் பாவனை செய்யவேண்டும். ஆயினும், பதிலுக்குப் பதில் தீங்கு செய்யாமல் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும். பாம்பு "கடிக்காவிட்டாலும், புஸ், புஸ் என்றால் பிறர் பயப்படுவார்கள்."

ஒரு பிரம்மோ பக்தர்:— ஸ்வாமி! ஒருவன் உலகத்தைத் துறந்தாலொழிய கடவுளை அடைய முடியாதென்பது உண்மையா?

பகவான்:— (புன் சிரிப்புடன்) இல்லவே யில்லை. எல்லாவற்றையும் துறந்துவிடவேண்டு மென்பது உன் விஷயத்திலல்ல. உன் தற்கால நிலைமையே உனக்குப்போதுமானது. நல்ல தங்கமும் கலப்பிடமான தங்கமும் உபயோகப்படவில்லையா? பளிங்கு போன்ற சுத்தமான ஜீனியும், சுத்தம் செய்யாத வெல்லமும் பொதுவாக இனிப்பாயில்லையா?

சீன் (57.)

இடம்:— தக்கணேஸ்வரம் கோவில்

காலம்:— காலை

பாத்திரங்கள்:— ராமகிருஷ்ணர்— மகேந்திரநாதர் (ம) நரேந்திரர்— (விவேகாநந்தர்) கேசவசந்திரசேனர் இன்னும் பல சிஷ்யர்கள். (சுவாமியைக் கோவி கீழே உட்கார்ந்திருக்கிறார்கள். சுவாமிகள் உபதேசம் செய்கிறார்).

ராமகிருஷ்ணர்:— சிஷ்யர்காள்! நித்தம் உங்களுக்கு உபதேசிக்கும் அரிய விஷயத்தைத்தான் இன்னும் சொல்லப் போகிறேன். ஆனால் அவைகளை மாற்றி மாற்றி வேறுவகையில் சொல்லுகிறேன். நாம் பகவானைக் காண வேண்டுமானால் நீங்கள் முதலில் உங்கள் இருதயங்களை சுத்தமாய் வைத்திருக்க வேண்டும். உதாரணமாக ஒரு அழுகிய ஜந்துக்கு சமீபத்திலோ அல்லது மலத்திற்கு சமீபத்திலோ நீங்கள் இருக்கப் பிரியப்படமாட்டீர்கள் அல்லவா? அதுபோல் பகவானை அமைக்கும் உங்கள் இருதயம் நிர்மலமாய் எவ்விதமான கெட்ட விஷயங்களும், ஆபாச எண்ணங்களும் இல்லாமல் இருக்கவேண்டும். தலை போனாலும் உங்கள் ஒழுக்கங் கெடாது ஒழுகவேண்டும். இவ்விதம் உங்கள் மனதை சுத்திசெய்து உங்களுக்கு இஷ்டமான ஒரு உருவத்தை உங்கள் மனதில் நினைத்து அது உங்கள் மனதில் உயிரோடு இருந்து உங்களோடு பேசுவது போல் பாவித்து நீங்களும், உங்கள் அகக் கண்களால் அதை நோக்கி பேசிக்கொண்டு இருக்கவேண்டும். இதுவேதான் பரமானந்தம். வெளியே தோன்றும் அவ்வளவு வஸ்துக்களையும் உங்கள் மனதில் நீங்கள் அமைத்திருக்கும் உருவமாகவே நினைத்து அவைகளையும், மனதார வணங்கவேண்டும். இதுவேதான் பரம்பொருளின் தெரிசனம். (இவ்விதம் சொல்லும்போதெல்லாம் சுவாமி விவேகாநந்தரை அடிக்கடிப் பார்த்து சந்தோஷிக்கிறார். இவ்விதம் கொண்டே சமாதியில் ஆழ்ந்தார். சிஷ்யர்களும் வெளியே கிளம்பி அவரவர்கள் தனித்தனியே சுவாமிகளின் பெருமையைப்பற்றி பேசுகிறார்கள்.)

சீன் (58.)

இடம்:— தக்கணேஸ்வரம் கோவிலுக்கு வெளியில்

காலம்:— மாலை

பாத்திரங்கள்:— விவேகாநந்தர் (நரேந்திரர்)—மகேந்திரர் (ம)

ம:— நரேந்திரரே! பகவான் உபதேசங்களைக் கேட்டீர்களா?

நரேந்திரர்:— ஆம் இவர் மகிமை யாருக்கும வாராது. சாஸ்திர சம்பிரதாயங்களும் அறியாதார். மேலும் தாய் பஷையும் படிக்கவில்லை. ஆனால் ஞான மார்க்கமாகவோ அல்லது உலக மார்க்கமாகவோ எதைக் கேட்டாலும் உடனே "சட்டி சுட்டது கைவிட்டது" என்றதுமாதிரி பதில் உரைக்கிறார்.

ம:— நரேந்திரரே, பகவானுக்கு தங்கள்மேல்தான் ஒரு கண்ணு. அதன் கருத்தை நீர் அறிவீரோ?

நரோந்திரர்:—அன்பரே! அவர் என்னை ஒரு துஷ்டனென்று நினைக்கிறார் என்று நான் எண்ணுகிறேன்.

ம:— எண்ணினாலும், தனக்குப் பின் தங்களைத்தான் அவருடைய ஸ்தானத்திற்கு தகுதி உடையவராய் நினைக்கிறார். அதை நான் அறிவேன். (இடையில் ஒருவர் இந்த இருவரையும் நோக்கி சுவாமிகள் எழுந்துவிட்டார்கள் என்கிறார் இருவரும் மறுபடியும், எல்லோரோடும் போகிறார்கள்.)

சுவாமி:— நான் அயர்ந்துவிட்டதாய் அகன்றீர்களா? இல்லை இன்னும் எத்தனை தினங்கள் வேண்டுமானாலும் உங்களோடு பேசி உறவாடத்தான் என் மனம் ஆசைப்படுகிறது. சரி பொழுதும் போய்விட்டது. சென்று நாளை வாருங்கள். (போகிறார்கள்) நரேந்திரர்கூட போகவேண்டுமா? இரவு இங்கு தங்கக் கூடாதா?

நரேந்திரர்:— சுவாமிகள் இஷ்டப்படி நடக்கிறேன். (நரேந்திரர் மாத்திரம் தங்கிவிட்டார். இருவரும் பேசுகிறார்கள்)

நரேந்திரர்:— சுவாமி, நம் மதத்திலும் ஏனையமதங்களிலும் உண்மையான கடவுள் இருப்பது உண்மையா?

சுவாமிகள்:— குழந்தாய்! எல்லா மதங்களிலும் உண்மை உண்டு. வேண்டுமானால் நான் உன் அகக் கண்ணிற்குப் புலப்பட காட்டுகிறேன். இதோபார்! (என்று விவேகாநந்தரைத் தடவினார். அவரும் சமாதியில் ஆழ்ந்தார். சில குறிகள் காட்டினார். முதலில், காளி ரூபமும், பிறகு மகமதுவும், பிறகு இயேசுவும், பிறகு புத்தரும் தோன்றும்படிச் செய்தார். மறு நிமிஷத்தில் சுவைக்கிளப்பி விட்டார். சுவாமி நரேந்திரரை பக்கத்தில் அழைத்து) குழந்தாய்! நான் இதுவரையில் உங்கள் எல்லோருக்கும் எவ்வளவோ விஷயங்களை உபதேசித்தாலும், இதுவரையில் நான் சம்பாதித்த சொத்தாகிய என் ஞான முழுமையும் உனக்கே கொடுத்து நான் இன்றுமுதல் ஒரு பக்கிரியாகிவிடுகிறேன். (என்று ஆசீர்வதித்தார்.) நான் கடைசியாய் சொல்லவேண்டியது இது

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க.)

# சித்த முனிவர்கள்.

நத்தப்பள்ளம் Dr. S. வைத்தியலிங்கம் செட்டியார், R. I. M.

அகத்தியன், ஆங்கீரஸன், கௌதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், வஸிட்டன் என்னும் எழுவரும் சப்தரிஷிகள் என்று சொல்லப்படுகிறது. இவருள் சிலரைக் கொண்டு சிலரை நீக்கி வேறு ஒரு மாதிரியாகவும் சொல்லுகிறார்கள். இருவழியிலும் 'அகத்தியன்' முதன்மையாகக் காணப்படுகிறார். அன்றி, முனிவர் முப்பத்தொருவரினும் அகத்தியமாமுனியே பிரதம ஸ்தானம் வகிக்கிறார். அம் முப்பத்தொருவரும் பின்வருமாறு:—

1. அகத்தியன்
2. அத்திரி
3. ஆங்கீரஸன்
4. இரணியமாமுனி
5. உரோமமாமுனி
6. ஏரண்டமாமுனி
7. கலைக்கோட்டுமுனி
8. காசிபன்
9. கௌதமன்
10. சத்திகூன்முனி
11. சச்சிதானந்தன்
12. சமதக்னி
13. சனகன்
14. சனக்குமாரன்
15. சுகன்
16. ததிமகாமுனி
17. துருவாசன்
18. நாரதன்
19. பதஞ்சலி
20. பரத்துவாசன்
21. பராசரன்
22. பற்பமாமுனி
23. பிருகுமாமுனி
24. பிஙகிமாமுனி
25. புலத்தியன்
26. மார்க்கண்டன்
27. வஸிட்டன்
28. வான்மீகி
29. விசுவாமித்ரன்
30. வியாக்கிரபாதன்
31. வியாஸன்

முனி, என்னும் வினைப்பகுதி கடிகோபி என்னும் பல பொருள்படும். 'அர்' என்னும் உயர்திணை விகுதி, வினையடியாகப் பிறந்த 'முனிவு' என்னும் பெயரோடு புணர, கோபத்தையுடையவர், அல்லது கடிபவர் எனப்படும். ஈண்டைக்குக் கடிபவர் என்பதே தக்க பொருளாவது காண்க என்னெனில் மூன்று ஆசைகளையும், ஆறு உட்பகைகளையும், ஐந்துணர்ச்சிகளையும், தொண்ணூற்றாறு கருவிகரணங்களையுங் கடிந்து, தன்னிலையினில் வழுவாதிருப்பவர் முனிவர்களாதலின் என்க. அன்றியும் தேவராயினும் அறநிலை தவறின் கடிபவர். தேவர்க்கரசராயினும் தருமநிலை கெடின் கடிபவர் என்று கொள்க.

சித்தர்களில் நவநாத சித்தர்களென்றும் பதினெண் சித்தர்களென்றும் வழங்கப்பெறுகிறது. நவசித்தர்கள் வருமாறு:—

1. சத்தியநாதர்
2. சதோகநாதர்
3. ஆதிநாதர்
4. அநாதிநாதர்
5. வெகுளிநாதர்
6. மதங்கநாதர்
7. கடேந்திரநாதர்
8. மச்சேந்திரநாதர்
9. கோரக்கநாதர்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

## பரமஹம்ஸரின் பக்திரச நாடகம்.

(10-ம் பக்கத் தொடர்ச்சி.)

தண்டனைக்கு எப்பொழுது என் தபோபலம் சாடாவும் உனக்கு அளித்துவிட்டேனே, இனி நான் வெகுநாளைக்கு இருக்கமாட்டேன். இன்றுமுதல் நான் ஒரு வெற்றுத் தோல் கூடுதான். சரி! படுத்துக் கொள் காலையில் பேசிக்கொள்ளுவோம்.

சீன் (59)

இடம்:— தக்கணேஸ்வரம் கோவில்.

காலம்:— காலை.

பாத்திரங்கள்:— சுவாமிகள்—நரேந்திரர்—மற்ற சிஷ்யர்கள். (சுவாமிகள் கொஞ்சம் இளைப்பாயிருந்தார். ஆகாரம் சரியாய்ச் செல்லவில்லை. சிஷ்யர்கள் சோதிக்கிறார்கள்.)

சுவாமிகள்:— சிஷ்யர்காள் இனி நான் வெகு நாள் இருக்க முடியாது. என் உடலில் ஒரு உபாதை ஏற்பட்டிருக்கிறது.

நரேந்திரர்:— சுவாமி, இங்கு சிகிச்சை செய்வதென்றால் ஆள் கிடைக்காது. ஆகையால் வேறு இடத்திற்குச் சென்று சுவாமிகளுக்கு உபாதையைத் தவிர்க்க ஏதேனும் சிகிச்சை செய்யலாமென்று நினைக்கிறேன்.

சுவாமிகள்:— நரேந்திரரே! எல்லாம் உம்மிடம் ஒப்புவித்ததுபோல் இந்த சகல சிஷ்யர்களையும் உன்னிடமே ஒப்புவிக்கிறேன். நீதான் எனக்குப் பின்னால் அவர்களுக்கு ஆதரவு. இனி நானும் உன் இஷ்டப்படியே நடக்க வேண்டியவன்தான். (உடனே சுவாமிகளை வேறு இடமாகிய காசிப்பூருக்குக் கொண்டு போனார்கள்)

சீன் (60)

இடம்:— காசிப்பூர் (ஒரு பெரிய வீடு)

காலம்:— காலை

பாத்திரங்கள்:— சுவாமிகள்-நரேந்திரர் இன்னும் பல சிஷ்யர்கள் சூழ

சுவாமி:— (நரேந்திரரையும் மற்ற சிஷ்யர்களையும் கிட்ட அழைத்து வைத்துக்கொண்டு) என் தொண்டை பேசமுடியாமல் இருக்கிறது. இருந்தாலும் உங்களிடத்தில் கடைசியாய் நான் இன்று சொல்லுகிறேன். இந்த தேகம் அநித்தியம்; இதன் உள் இருக்கும் ஆத்மா நித்தியம். அதையும் குழந்தை நரேந்திரருக்கு அளிக்கிறேன். என் உடலைப்பற்றி ஒரு பொருட்படுத்த வேண்டாம். எப்படி வேண்டுமானாலும் செய்யுங்கள். இதோ இந்த ஒரு உருவம் இரண்டுபேர் கொண்ட அவதாரம். (என்று அடங்கினர். உடனே அவர் உடலில் இருந்து இரண்டு உருவம் (1) ராமராகவும் (2) கிருஷ்ணராகவும் பிரிந்து மேல் நோக்கிச் சென்றன. 1886-ஞு ஆகஸ்டு-மீ 11௳ சோமவாரம்)

சீன் (61)

இடம்:— சுடுகாடு

காலம்:— மாலை

பாத்திரங்கள்:— சிஷ்யர்கள் எல்லோரும் உடலை எரித்துச் சாம்பலை பத்திரப்படுத்தி வைத்துப் பூசிக்கொண்டார்கள். அவர் பேரால் மடம் நிறுவப்பட்டது.

# போற்றித் திருத்தலக் கோவை.

—— 0 ——

மறைசைக் குறுக்கை
திரு க. குப்புசாமி பிள்ளை அவர்கள் இயற்றியது.

## சத்தவிடங்கத் தலங்கள்.

வெண்பா.

சத்தவிடங் கத்தலங்கள் சாற்றுங்கால் நள்ளாறு
கத்தன் ஆரூர்வாய்மூர் காருயில்— நத்தும்
நாகைக் காரோணமுடன் நாடு திருக் கோளிலியும்
ஈகை மறைக்காடாம் இசை.

## சத்தவிடங்கர் திருநாமம்.

கலிவிருத்தம்.

ஆரூர்வீதி விடங்கம் அமருங் காருயில்
ஏரூர்ஆதி விடங்கம் புவனி எழில்மறைசை
நீரூர் கோளி லியவனி சுந்தரம் நிகழ்நாகை
நேரூர் வாய்மூர் நீலம்நளாறு நேர்நகமே

## சத்தவிடங்கர் திருநடனம்

கலித்துறை.

ஆரூர் அசபாநடனங் காருயில் அணிகுக்குடம்
ஏரூர் மறைசையில் அம்சபதம் எழில்கோளிலியில்
சீரூர் பிருங்கமும் நாகையில் வீசி திகழும்வாய்மூர்
நீரூர் கமலம் நள்ளாறில் உன்மத்தமும் நேர்ந்திடுமே.

## அட்ட வீரட்டானத் தலங்கள்.

கலித்துறை.

பூமன் சிரங்கண்டி அந்தகன் கோவல்புரம் அதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்
காவன் குறுக்கை யமன் கடவூர் இந்தக்காசினிமில்
தேமன்று கொன்றையுந் திங்களுஞ்சூடி தன்சேவகமே.

## மதிப்புரை.

### ஞான சம்பந்தம்.

தருமபுரம் ஆதீனம் ஒடுக்கம் சிவ குருநாதத் தம்பிரான் அவர்களை ஆசிரியராகக்கொண்டு ஒவ்வொரு இங்கிலீஷ் மாதமும் 10உ வெளிவரும் ஞான **சம்பந்தம்** என்னும் மாதாந்தர சஞ்சிகையின் 1-வது மலர் 2-வது இதழ் வரப்பெற்றோம். தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் மக்களின் மதம் ஆசாரம் அனுஷ்டானம் ஒழுக்கம் கல்வி ஆகிய இவற்றின் மேன்மைக்கும் இப்பத்திரிகை சேவை புரிவதற்கு ஏற்றதாய் காணப்படுகிறது. தமிழிலும் சைவ சித்தாந்த சாத்திரத்திலும் நுண்மாண் நுழை புலமுடைய பெரியோர்களால் எழுதப்பெறும் கட்டுரைகள் கொண்டதாய் கற்றோர்களுக்கு இன்பம் பயக்கும் அரிய பத்திரிகை.

வருட சந்தா ரூ. 1–8–0.
கிடைக்குமிடம்:- தனிப்பிரதி 0–2–0.
செயலாளர், **ஞானசம்பந்தம்**,
தருமபுரம், மாயவரம்.

(11-ம் பக்கத் தொடர்ச்சி.)

கடமுனி, கும்பமுனி, குறுமுனி என அகத்தியருக்கு பல பெயர்கள் வழங்கி வருகின்றன. அவற்றுள் கடேந்திரன் என்பதும் ஒன்று. மச்சேந்திரநாதர் கோரக்கநாதர் என்பவர்கள் மச்சமுனி கோரக்கமுனி என்றும் குறிப்பிடுகிறார்கள்.

பதினெண் சித்தர்களைப்பற்றி அபிதான சிந்தாமணியில் பின்வருமாறு கூறப்படுகிறது.

1. அகத்தியர்
2. போகர்
3, கோரக்கர்
4 கைலாசநாதர் †
5. சட்டைமுனி
6. திருமூலர் †
7. நந்தி
8. கூன்கண்ணர் †
9. கொங்கணர்
10. மச்சமுனி
11. வாஸமுனி †
12 கூர்மமுனி †
13. கமலமுனி
14 இடைக்காடர்
15. புண்ணாக்கீசர் †
16. சுந்தரானந்தர்
17. உரோமரிஷி †
18. பிருமமுனி †

இப்பதினெண் சித்தர்களின் வரலாற்றைப்பற்றி ஆராய்ந்து பார்த்ததில், கைலாசநாதர், கூன்கண்ணர், வாசமுனி, கூர்மமுனி, புண்ணாக்கீசர் என்னும் சித்தர்களின் சரித்திரம் அகப்படவில்லை.

கைலாசநாதர், கூன்கண்ணர், வாசமுனி, கூர்மமுனி, புண்ணாக்கீசர், என்னும் சித்தர்களின் சரித்திரம் அகப்படவில்லை.

சென்னை சர்வகலாசாலையார் வெளியிட்டிருக்கும் தமிழ் லெக்ஸிகனில் பதினெண் சித்தர்களைப்பற்றிப் பின் வருமாறு கூறப்படுகிறது:—

| | |
|---|---|
| 1. இராமதேவர்* | 10. கோரக்கர் |
| 2. அகத்தியர் | 11. சட்டைமுனி |
| 3. வான்மீகியார்* | 12. திருமூலர் |
| 4. தன்வந்தரி* | 13. நந்தி |
| 5. பதஞ்சலி* | 14. கொங்கணர் |
| 6. போதகுரு* | 15. மச்சமுனி |
| 7. பாம்பாட்டி* | 16. கமலமுனி |
| 8. குதம்பைசித்தர்* | 17. இடைக்காடர் |
| 9. போகர் | 18. சுந்தரானந்தர் |

ஈண்டுக் கூறப்பட்டிருப்பவர்களில், போதகுரு, பதஞ்சலி என்னும் இருவர் சரித்திரம் கிடைக்கவில்லை. அபிதான சிந்தாமணியாருக்கும், லெக்ஸிகனுக்கும் உள்ள வேறுபாடென்ன வெனில், * இக்குறியிடப்பட்ட பெயர்கள் அபிதான சிந்தாமணியில் காணப்படவில்லை. † இக்குறியிடப்பெற்ற பெயர்கள் லெக்ஸிகனில் காணப்படவில்லை. ஏனைய பதினொரு பெயர்கள் இரண்டிலும் காணப்படுகின்றன.

Edited, Printed and Published by G. DAKSHNAMOORTHI at his 'Victoria Press,'
TIRUTURAIPUNDI.